## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## HC 302 – இந்துக்கலைகள்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

1. கி.பி. 4 – 6 ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் வடஇந்திய இந்துக்கலை வரலாற்றின் போக்குகளைப் பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க?
   - I. கோயிற் கட்டடக்கலை
   - II. சிற்பங்களும் ஓவியங்களும்
   - III. இலக்கியங்கள்

2. "திராவிடக் கட்டடக்கலையின் முக்கிய திருப்பு முனையாகப் பல்லவர் காலம் திகழ்கிறது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க?

3. சோழர்காலம் தென்னிந்தியக் கலைவரலாற்றின் பொற்காலமாகத் திகழ்கிறது, இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுக?

4. தென்னாட்டில் ஓவியக்கலையின் சிறப்பம்சங்களைப் பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க?
   - I. சித்தன்னவாசல் ஓவியங்கள்
   - II. பனைமலைக் கோயில் ஓவியங்கள்
   - III. தஞ்சைப் பெரியகோயில் ஓவியங்கள்

5. இந்து விக்கிரகக் கலையின் குறியீட்டுப் பண்பமைதியினைத் தேர்ந்தெடுக்கப்பட்ட தெய்வ மூர்த்தமொன்றை அடிப்படையாக்க கொண்டு ஆராய்க?

6. விஜய நகர நாயக்கர் காலக் கட்டடக் கலையின் தனிச்சிறப்புக்களைப் பின்வரும் தலைப்புக்களில் பரிசீலனை செய்க?
   - I. கோபுரங்கள்
   - II. மண்டபங்கள்
   - III. தெப்பக்குளங்களும் நெற்களஞ்சியங்களும்

7. தமிழக நாட்டார் நிகழ்த்து கலைகளில் பின்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தை ஆராய்க?

I. கணியான் ஆட்டம்

II. கிருஷ்ணனாட்டம்

III. வீரபத்திரசாமி ஆட்டம்

8. எவையேனும் மூன்றிற்குக் குறுங்கட்டுரை வரைக?

I. பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கட்டடக்கலை பற்றிய செய்திகள்

II. சிற்பசாஸ்திரங்கள்

III. சிலப்பதிகாரத்தில் நாட்டியக்கலை

IV. கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி